கடவுள் துணை.

னை முத்துகுமரன் தியானம்

என்னும்

கந்தர் பஜனைமூர்தம்

K. T. R. வேணுகோபால் தாஸ்

அவர்களியற்றியது.

K ரை முதலியார் பதிப்பு

[விலை அணா 1.

935.

Q26:38:2111

NBJ

கடவுள் துணை.

சென்னை முத்துக்குமரன் தியானம்

என்னும்

கந்தர்பஜனமுர்தம்

விருத்தம்.

கந்தனை போற்றிட காலனும் அனுதிடா
சிந்தனை தீர்த்திடும் ஜென்மமும் சுயம்பெரும் முந்தி
தொந்தி விநாயகர் தம்பியை அனுதினம்
சிந்தையில் நினைத்தவர் சொர்க்கமே நீகூர்.

மேரே மௌலா என்றமெட்டு.

கந்தா கருணாகரா எனைகார் குமரா
செந்தூர் கிருபாகரா சேவைதாசமரா (க)

ஆதரித்தருள் வேலனே ஆருமாமுகலோலனே
தீதகற்றிடும் சீலனே தெய்வானை வள்ளி சமேதனே
வா—வா வேல் முருகா—வரம்
தா மருகா (வ)

சென்னை முத்துகுமரனே உன்சேவை தந்தருள் யோகனே
கண்டி கதிரேசனே எனைகார்த்தருள் விஸ்வாசனே
காரும் கருணாகரா பக்தர்
குபகாரா (கா)

சூரரை சம்மாரம் செய்த சுப்ரமண்ய தேசிகா
வீரரையே வேரருத்த வையாபுரி வாசிகா

1717

வரம்தரு மூருகா வினை
தீர் மருகா (கா)

வர்ணமயில்வாகன வேதாந்தமே புகழ்மோகனு
கார்த்திகேயவாசனே என்கவலைதீர்க்கும் நேசனே
கண்பார் கந்தையனே குரை
தீர்த்தவனே (க)

பாவலர்கள் போற்றிசெய்யும் பரமனே உன்தெரிசனம்
நாவலர்கள் அனுதினமும் நம்பிபோற்றும் தெரிசணம்
சென்னை வேணுகீதம் தமிழ்
சங்கு நாதம் (க)

வண்ணன் வந்தானே என்றமெட்டு.

சென்னை முத்துக்குமரன் தெரிசனம்
ஜெகம் புகழ்த்தீரன்

மண்டலந்தன்னிலே மேன்மையாகவே
கண்டவர் பணியும் கந்தன் தெரிசனம்
பார்த்தவர்க்கு பரமாணந்தம் எங்கும்
பேசிடுவார் நித்யாணந்தம்

இனையில்லாதது உற்சவம்
எதிரில்லாதது அந்த
பதினெட்டு நாளினில் பர்பல வாகனம்
பதுமைபோலே பாரில் நடத்திடும்

விஸ்வகர்மா கைதிரமே நெல்ல
வேலையாட்கள் செய்தீரமே
தெரிசன காக்ஷி கண்டோர்
தவமதின் சூக்ஷி அங்கே

2117
284.0954

செய்முறையாக சாத்துபடியே
வைய்யக மீதினில் வைதீகர் செய்திடும்
ஆருமுகன் அலங்காரமே புஷ்ப
ஆராதனை நெய்வேத்யமே

ஆறுமுகன் சேதி இந்த
அகிலமே கியாதி எங்கும்
காவடி கூட்டங்கள் கோடான கோடி
ஆவலாய் செய்திடும் அற்புத சேவடி

வேணுகவி பாடிடுவார் சென்னை
வாளிபர்கள் புகழ்ந்திடுவார்

சென்னை கந்தசாமி கோவில் பதினெட்டு நாள் உற்ஸவ வைபவம்

கிளிக்கண்ணி வர்னமெட்டு.

1 சென்னை முத்துக்குமரன் சன்னதியில் நடக்கும்
உன்னத உற்ஸவத்தை மயிலே
உரைத்திடுவாய்

2 அனுதினம் நடந்திடும் அற்புதவாகனத்தை
மானிடர் கண்டுவிட மயிலே
மறுமுறை சொல்

3 கர்ப்பக காமதேனு கண்டவர் புகழ்ந்திட
ஓராம் நாள் நடந்திடுவார் மயிலே
ஓய்யாரம் பேசிடுவார்

4 சிங்கவாகனமேறும் ஷண்முகன் பவனியில்
இரண்டாம்நாள் செய்திடுவார் மயிலே
இன்பமாய் வணங்கிடுவார்

5 சூரபத்மாவீரனே சிரசதை வெட்டிநின்ற
மருமகனின் தெரிசனமே மயிலே
மூன்றும்நாள் கேள் மனமே

6 நாகவாகனமின்று நங்கையே போய்வருவோம்
நாகரீக ஆடைகளே மயிலே
நான்காம்நாள் நடத்திடுவாய்

7 மயில்வாகன சேவையை மங்கையே பார்த்திடுவாய்
ஐந்தாம் நாள் வேடிக்கையே மயிலே
ஆயாசம் தீர்த்திடுவாய்

8 ஆனைவாகனமீது ஆனந்த மாகவரும்
ஆறுமுகன் சேவடியே மயிலே
ஆறும்நாள் வழிமுறையே

9 தேரின்மேல் ஏறிநின்ற தண்டபாணி பெருமை
ஏரகவாசனடி மயிலே
ஏழாம்நாள் வந்திடடி

10 குதிரை வாமனமீது குமரன் பவனிருக்க
கட்டாயம் பார்த்திடுவாய் மயிலே
எட்டாம்நாள் தங்கிடுவாய்

11 கையிலங்கிரியைபோலே கைலாச பருவதம்
ஒப்யார பெண்ணரசே மயிலே
ஒன்பதாம் தேதி என்பார்

12 பழனியாண்டவர் வேடம் பத்தாம்நாள் யாவர்கூடி
அழகான தெரிசனமே மயிலே
அய்யனின் அருள்வளமே

13 தண்ணீரில் தான்சுழல் தெப்ப உற்ஸவமென்று
பாண்டவர் நாளையிலே மயிலே
பதிமூன்றாம் நாளையிலே

14 கண்களே பரித்திடும் கண்ணுடி பல்லாக்கிது
பனிரெண்டாம் நாளையிலே மயிலே
பார்த்தவர் சொல்வாரடி

15 மங்களகிரி இந்திரன் மருகன் வாகனவீரன்
பாங்கான பெண்ணரசே மயிலே
பதிமூன்றும் நாளையிலே

16 வெள்ளானையுடன் தெய்வ வாகனமீதிலேரி
பலமான வம்சமடி மயிலே
பதினுன்காம் நாளையிலே

17 வேடர் பரிணயமே வள்ளியின் கல்யாணமே
பாடகர் பேரின்பமே மயிலே
பதினைந்து பதினாரிலே

18 வளவுசேர்வைமீது வடிவேலன் குந்திகொண்டு
பலவித மானிடர்க்கு மயிலே
பதினேழில் கியாதிகந்த

19 ஆறுமுகத்துடனே அடியாரை காக்கயின்று
பெருமையாய் வருவாரடி மயிலே
பதினெட்டாம் கடைசியிலே

20 பதினெட்டு நாளின்சேதி பாலனும் பகர்ந்திட்டேன்
பதிப்பிட கேட்டதினால் மயிலே
பாடினேன் வேணுகோபால்

காந்திரிஷி என்றமெட்டு.

பல்லவி.

ஆனந்தமே கந்தநாதன்
தெரிசனமே (ஆ)

அனுபல்லவி.

ஆனந்தமே கந்தன் ஆனந்தமே
எங்கும் தெரிசனமே முழங்கும் (ஆ)

வாணவர் போற்றும் எங்கள் வள்ளிமணவாளனே
வேலாயுதம் பிடித்தவையாபுரி லோலனே
ஞானமே நிறைந்த ஞானிகளின் சிலனே
நம்பினேன் வரமருள்வாய் நாவலர்க்குகந்தவனே
பேரின்பமே சென்னை கந்தன்
தெரிசனமே (அ)

தெய்வானை மணமுடித்த தண்டாயுதகுகனே
தேவர்கள் பாடதினம் தெரிசித்திடும் சண்முகனே
வையாபுரியமர்ந்த வேலாயுதசுதனே
வேண்டினேன் வேணுகோபால் வித்தையருள்பவனே
ஆனந்தமே கந்தநாதன்
தெரிசனமே (ஆ)

பாலாபிஷேகம் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஸ்ரீ முத்துக்குமரனைப் பணிந்திடுவோமே
ஜென்ம சாபல்யம் அகற்றிடுவோமே (ஸ்ரீ)

அநுபல்லவி.

சோமுகா சூரனை தாமத மின்றியே
சம்மாரம் செய்திட்ட சண்முகனும் (ஸ்ரீ)

சரணம்.

திருப்பரங்கிரிவளர் தமிழ்குபகாரன்
திருப்புகழ் மணமகிழ் தெய்வானை நீதன்

17172

வாசன்ப்ரகாசன் நேசன்
முருகேசன் பக்தர்கள் பணிந்திடும்
அன்புடையான் (ஸ்ரீ)

பதினெட்டு நாளினில் பார்த்திடகாகூடி
பதிபுகழ் ஆறுமுகன் தெரிசனமாகூடி
எங்கும் பிரசங்கம் புகழ்கவி
சிங்கம் சங்கீத வேணுகவி
முழங்கும் (ஸ்ரீ)

காமிசத்யபாமா கதவைதிறவாய் என்றமெட்டு.

வள்ளி கல்யாணம் வைபோக
ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தம் ஆனந்தம் குற வள்

வளையசெட்டியைப்போல வேடம் கொண்டகுமரன்
தினைவனம் சென்ற மருகன் மருகன்
முருகன் முருகன் குற வள்

பால்யபெண்களுக்கேற்ற பச்சைவளைலென
குமரிமுன் சொன்ன வேடனும் வேடனும்
வேடனும் வேடனும் குற வள்

தேனும் தினையுண்டதும் தாகம் தவிக்குதென்று
சுனைக்கேகிநின்ற வேலனும் வேலனும்
வேலனும் வேலனும் குற வள்

வேடரண்ணனுர் முன்னே வேங்கைமரமாய் நின்று
சன்யாசியான குமரன் குமரன்
குமரன் குமரன் குற வள்

அண்ணனே தான்துதித்து ஆனைவர நினைத்து
அலையவிடுத்த சமரன் சமரன்
சமரன் சமரன் குற வள்

பாலாபிஷேகயோக பாதுக்கார் ஞானதியாக
பாவை கல்யாணம் செய்குவேன் செய்குவேன்
செய்குவேன் செய்குவேன் குற வள்

ஆனைமுகத்தைதகானுள் ஆறுமுகனைகண்டாள்
அபசாரம்வேணு கவியே கவியே
கவியே கவியே குற வள்

கந்தர் பஜனைமூர்தம் முற்றிற்று.

ஒவ்வோரு குடும்பத்திலும் இன்றியமையாத
ஆயுள்வேத சிகிச்சாரத்தினமென்னும்

குடும்ப வைத்தியம்

இதன் விலை ரூபா 1 8 0

தேவேந்ரநாத் மாயாஜால வினோதம் 1 0 0
மதிமோசக களஞ்சியம் 1 0 0
ஷை இரண்டாம் பாகம் 1 0 0
கொக்கோகம் 1 0 0
ஜாதககணிதாரம்பம் என்னும் சோதிட ஆசான்
நாலுபாகம் கட்டடம் இதன் விலை ரூ 3—8—0
ஸ்ரீ கணேசர் திருப்புகழ் 100 பாடல் விலை அணு 0—4—0
தசாவதார மகிமை, இதன் விலை அணு 0—1—0

ஷண்முகானந்த புத்தகசாலை
5/34, கயினியப்ப நாய்க்கன் தெரு, பார்க்டவுன் சென்னை.

செல்வரங்கன் பிரஸ், மதரஸ்.

17174

காமதால் தேவை தேவை என்று எழுதிக்கொண்டிருப்
பவருக்கு உண்மையான 64-லீலா விநோதப்படங்களுடன்
கூடிய கொக்கோக நூல வெளிவந்துவிட்டது போலிப் புத்த
கங்களைக்கண்டு ஏமாறுமல் K. A. மதுரை முதலியார் பதிப்
பித்ததாகப் பார்த்து வாங்கவும்.

கொக்கோகம்

என்னும்

இரதி மன்மதன் திருவிளையாடல்.

உண்மையான மர்ம விஷயங்கள் பச்சையாக விளக்கப்பட்டுள்ள கொக்கோக சாஸ்திரம் இதில் காம உற்பத்தி, ஆண் பெண் சரீர அமைப்பு, நான்கு வகைப் பெண்களின் லக்ஷணம், சம்போகம் செய்ய வேண்டிய முறை, காதல் இலக்கணம், அழுக நிலை சோதனை, ஆலிங்கன வகைகள், பெண்களை வசீகரப்படுத்தும் மார்க்கம் முதலிய மர்மமான அரிய சிறந்த விஷயங்கள் அடங்கியுள்ளன 64 மதன லீலா சாஸ்திரத்துக்குரிய படங்கள், இரதி மன்மதனது திரு உருவப்படங்கள், மதனசக்கரபடம் (பூஜாவிதான் க்ரந்தம்), அழுதநிலை சக்கரம், ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹிமை வசிய சக்கரம் முதலியவை பளபளப்பான கடிதத்தில் விலை ரூ 2.

ஜாதக கணித ஆரம்பம் எனனும்

சோதிட ஆசான்

ஒரு மாதத்தில் தானே சோதிடம்
கற்றுக்கொள்ளலாம்.

பிரதி பாகம் ரூ 1. 4 பாகம் கட்டடம் ரூ. 3-8-0

ஷண்முகானந்த புத்தகசாலை, பி. டி, சென்னை.

டைட்டல் பேஜ் மாத்திரம் ஸ்ரீ எம்பிரான் பிரஸில் பதிப்பித்தது.